பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
15 08 2026 SATURDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் 80வது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மூவண்ண தேசியக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.
- திறன்வாய்ந்த பணியாளர்களை உருவாக்கும் வகையில் பிரதமரின் பணியிட பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- ஆன்லைன் பத்திரப் பதிவுமுறை விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என்று மாநில அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.
- காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 5 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி Galle-யில் இன்று தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

நாட்டின் 80வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசியக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.

இந்த விழாவில் முதல் முறையாக தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் ராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் மை பாரத் தன்னார்வலர்கள் என மொத்தம் 2 ஆயிரத்து 500 மாணவ மாணவிகள் பங்கேற்கின்றனர்.

சுதந்திர தின விழாவில் பங்கேற்க பல்வேறு துறைகளைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனையொட்டி தில்லி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

செங்கோட்டையைச் சுற்றிலும் சிசிடிவி கேமராக்கள் உட்பட பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலங்களின் தலைநகரங்களில் அந்தந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்ற உள்ளனர்.

சென்னையில் உள்ள செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு. விஜய் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சியின்போது பல்வேறு துறைகளில் சிறப்பாக சேவையாற்றியவர்களுக்கு விருதுகளையும் அவர் வழங்குகிறார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் மூவண்ண விளக்குளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<

தொழில்துறைக்கு தேவையான திறன்வாய்ந்த பணியாளர்களை உருவாக்கும் வகையில் பிரதமரின் பணியிட பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தொழிற்சாலைகளில் நேரடியாகப் பயிற்சி பெற்று வரும் இளைஞர்களிடையே அவர் கலந்துரையாடினார்.

தொழில்துறையினர் பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வியை படித்தவர்களுடன் கலந்தாலோசித்த பிறகே இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

18 முதல் 25 வயது வரை உள்ள இளைஞர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் சேர முடியும் என்றும், அவர்களுக்கு மாதம்தோறும் குறைந்தபட்ச உதவித்தொகை வழங்க முடியும் என்றும் அவர் கூறினார்.

தொழிற்சாலைகளில் நேரடி அனுபவத்தைப் பெறுவதன் மூலம் இளைஞர்கள் தங்களது திறன்களை வளர்த்துக்கொள்ள முடியும் என்று திரு. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>>>><<<<<<

கைத்தறி கண்காட்சி, கைத்தறி நிறுவனங்களுக்கும், நெசவாளர்களுக்கும் புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கைத்தறிக் கண்காட்சியை தொடங்கி வைத்து உரையாற்றிய அவர், இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி நாட்டின் கைத்தறி பாரம்பரியம், வடிவமைப்பு, தொழில்முனைவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைப்பதாக உள்ளது என்று அவர் கூறினார்.

இதுபோன்ற கண்காட்சிகள் கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதுடன் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிடும் என்று திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களின் பயன்கள் அனைத்து மக்களையும் சென்றடைவது உறுதி செய்யப்படும் என்று மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. விரேந்தர் குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஏழை மற்றும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களைப் பட்டியலிட்டார்.

அரசின் திட்டங்கள், மக்களுக்கு உதவுவதுடன் கல்வி, வாழ்வாதாரம், சமூகப் பாதுகாப்பு, கண்ணியமான வாழ்க்கை முறை போன்றவற்றில் நிலையான வாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கழிவுகளை அகற்றும் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு அத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகளில் அரசு உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார்.

துப்புறவுப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணியிடச் சூழல், சமூகப் பாதுகாப்பு ஆகியவை உறுதி செய்யப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில் பத்திரப் பதிவுகள் ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் முறை கட்டாயமாக்கப்பட உள்ளதாக மாநில பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், ஆன்லைன் வாயிலான பத்திரப்பதிவு நடைமுறைகளை இம்மாதம் 17ஆம் தேதி முதலமைச்சர் தொடங்கி வைக்க உள்ளதாக கூறினார்.

பத்திரம் பதியப்பட்ட 24 மணி நேரத்தில் அதற்கான ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

நாட்டுப்புற கலைகளை மீட்டெடுக்கும் வகையில் நெய்தல் திருவிழா தூத்துக்குடியில் நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விழாவில், கரகாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட கிராமியக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<

காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 5 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மதுரை, திண்டுக்கல், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 10 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகரைப் பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

_இருவரிச் செய்திகள்_

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிராக அதேபோன்ற வரி விதிப்பு முறையை மேற்கொண்டு வருவதாக பிரேசில் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

சீனாவில் உள்ள Hunan மாகாணத்தில் Lianyuan பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வாயு கசிவு காரணமாக, அங்கு பணியில் ஈடுபட்டிருந்த 52 பேரில், 44 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்

>>>>>>><<<<<<

காங்கோவில் பரவி வரும் எபோலா வைரஸ் காரணமாக, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 665ஆக அதிகரித்துள்ளது.

>>>>>>><<<<<<

ஐரோப்பிய நாடான ரோமானியாவில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, Cemavoda அணுமின் உற்பத்தி நிலையத்தில் உள்ள இரண்டாவது அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

யுஜிசி - நெட், சிஎஸ்ஐஆர் - நெட் உள்ளிட்ட படிப்புகளில் மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்விற்கான விடைகளை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.

>>>>>>><<<<<<

தூத்துக்குடி வ உ சி துறைமுகத்தில், காற்றில் உள்ள ஈரப்பதத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குடிநீர் உற்பத்தியை மத்திய துறைமுகங்கள் துறை செயலாளர் திரு முகேஷ் மங்கள் தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<

மாமல்லபுரத்தில் சர்வதேச காற்றாடி திருவிழாவை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ் குமார் தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<

வேலூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையில் சோதனை முறையில் உற்பத்தி தொடங்கிய நிலையில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவு குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

>>>>>>><<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள மாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

>>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்று நடும் விழா நேற்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

Galle-யில் நடைபெறும் இப்போட்டி காலை 10 மணிக்குத் தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திண்டுக்கல், சேப்பாக் அணிகள் வெற்றி பெற்றன.

திண்டுக்கல்லில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் திண்டுக்கல் அணி 81 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

*பின்னர் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் சேப்பாக் அணி, 39 ரன் வித்தியாசத்தில் மதுரை அணியை வென்றது.*

*இன்று நடைபெறும் ஆட்டத்தில், கோவை அணி - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.*

*>>>>>><<<<<<*